# உலகப் பொதுமறை வள்ளுவம்



தொகுப்பாசிரியர் : உடையார்கோயில் குணா


பதிப்பாசிரியர்கள்

முனைவர் அ.ஜெஸின் பிரான்சிஸ்

முனைவர் க.சுஜாதா

முனைவர் க.இந்துமதி

முனைவர் சி.சங்கீதா

செ.தமிழரசி


## உலகத் திருக்குறள் மாநாடு-2019
## மலேசியா


தமிழ்த் தாய் அறக்கட்டளை வெளியீடு

10

Page no - 237 - 245

உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–1





தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**



**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

**கோலாலம்பூர் – மலேசியா.**

---

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்


தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**
முனைவர் **க.சுஜாதா**
முனைவர் **க.இந்துமதி**
முனைவர் **சி.சங்கீதா**
**செ.தமிழரசி**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : 978-81-909877-5-2

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# திருக்குறள் கூறும் இறந்தோர் வழிபாடும், பெருங்கற்கால ஈமச்சின்னங்களும்

திருமதி.சிவரூபி சயிதரன்

36

தமிழின் தொன்மைச் சிறப்பினை நிலை நிறுத்துவதில் திருக்குறள் போன்ற இலக்கியங்களுக்கு பெரும்பங்குண்டு. திருக்குறளின் சிறப்பு காரணமாகவே பல மொழி, பல இனத்தவர்களிடையேயும் இற்றைவரை செல்வாக்கு செலுத்தி வருகின்றது. மிகச்சிறந்த உதாரணமாக பிரித்தானியர் ஆட்சிக்கால தமிழகத்தில் திருக்குறள் பெற்ற செல்வாக்கினைக் குறிப்பிட முடியும்.

இந்தியாவில் பிரித்தானியர்களால் திருவள்ளுவர் திருவுருவம் பொறித்த தங்கநாணயங்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், பிரித்தானிய உயர் அதிகாரிகளில் ஒருவராகிய ப்ரான்சிஸ் வைட் எல்லிஸ் என்பவர் தமிழகத்தில் தன்னால் நிறைவேற்றப்பட்ட பணி பொருட்டு உருவாக்கப்பட்ட கல்வெட்டெயின்றில் திருக்குறளை (குறள் 737) மேற்கோள் காட்டியிருந்தார். அத்துடன் அவருடைய கல்லறை வாசகம் கூட திருக்குறளின் பெருமையை தாங்கியுள்ளதெனலாம்.

இவரே முதன்முதலில் திருக்குறளை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கும் நடவடிக்கையை மேற்கொண்டவராவர் (ஐராவதம் மகாதேவன், 2008). இத்தகைய சிறப்பு பெற்ற திருக்குறள் ஒரு சமுதாயத்திற்கு வேண்டிய தனிமனித ஒழுக்கங்கள், வாழ்க்கை நெறிமுறைகள், அரசியல், பொருளாதார, சமய, பண்பாட்டு கருத்துக்களை எடுத்தியம்புகின்றன. இக்கருத்துக்கள் பெரிதும் திருக்குறளுக்கு முற்பட்ட சமுதாயத்தினையும், அதற்கு பிற்பட்ட சமுதாயத்தினையும் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறாக தமிழ் நூல்களில் உலக பொது நூலாக நோக்கப்படும் திருக்குறளில் கூறப்பட்டுள்ள இறந்தோர் வழிபாடு பற்றிய செய்திகளை ஆராய்வதனூடாக அக்கால சமூக,

சமய, பண்பாட்டு நம்பிக்கைகளைக் கண்டறிவதாகவும், திருக்குறள் தோற்றம் பெற்ற காலத்திற்கு முன்னரே, இறந்தவர்களை வழிபடும் மரபு தோற்றம் பெற்றிருந்த தன்மையினையும், அதன் தொன்மையான வழக்கத்தினையும் எடுத்துக்காட்டுவதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

எல்லாச் சமூகங்களிலும் பொது வெளிகளிலும் முன்னோர்கள் வழிபாடு, இறந்தவர்களுக்காக நினைவுச் சின்னங்கள் கட்டியெழுப்பப்பட்டிருந்தது என்பது சாதாரணமான ஒரு காட்சியாகும். எனினும் இவற்றிற்கிடையே அவையாக்கப்படுவதற்கான காரணிகள் தொடர்பான வேறுபாடுகளும், பௌதீக ரீதியான வேறுபாடுகளும் காணப்படும். எனவே முன்னோர்கள் வழிபாடு, இறந்தவர்களுக்காக நடுகற்கள் அல்லது நினைவுச் சின்னங்கள் அமைக்கும் மரபென்பது நீண்ட பாரம்பரிய வரலாற்றினையுடையன. உலகத்தின் புராதன நதிக்கரை நாகரிகங்கள் தொட்டு இறந்தவர்களை வழிபடுகின்ற மரபு, அவர்கள் பொருட்டு நினைவுச் சின்னங்கள் அமைக்கும் மரபு என்பன பொது வழக்கமாக இருந்து வந்துள்ளது. தென்னாசியாவில் இம்மரபு மிகத்தொன்மையானதெனிலும், பெரிய பெரிய கற்களினைக் கொண்டு இறந்தவர்களுக்காக ஈமச்சின்னங்கள் அமைக்கும் கி.மு மூவாயிரம் ஆண்டு தொன்மை வாய்ந்த பெருங்கற்காலமே இம்மரபிற்கு அடிப்படையாக அமைந்திருந்தது. இந்தவகையில் திருக்குறள் தோற்றம் பெற்ற காலமும் கூட இறந்தவருடைய வழிபாடு, அவை சார்ந்த பண்பாடு என்பவற்றிலிருந்து விதிவிலக்காக அமைந்துவிடவில்லை. திருவள்ளுவர் இம்மரபினை பின்வரும் குறளினூடாக எடுத்துக்காட்டியுள்ளார்.

**“தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு**
**ஐம்புலத்தார் ஓம்பல் தலை”** **(குறள் 43)**

இல்வாழ்வானுக்குரிய அறங்களாக இறந்து தென்திசையில் வாழ்பவர், தெய்வம், விருந்தினர், சுற்றத்தார், தான் என்ற ஐந்து பேருக்கும் செய்ய வேண்டிய கடமைகளை நிறைவேற்றிக் கொள்வதேயாகும் எனக் கூறப்படுகின்றது. இதனூடாக திருக்குறள் காலச் சமூகத்தில் இறந்தவர் வழிபாடு பெற்ற செல்வாக்கினைக் காணமுடிவதுடன், இல்வாழ்வானுக்குரிய முக்கிய கடமைகளில் ஒன்றாக இறந்தவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமையும்

அமைகின்றது. திருவள்ளுவர் இக்குறளில் தெய்வத்திற்கு முன்னரே தென்புலத்தாராகிய இறந்தோரை வைத்திருப்பது அக்காலச் சமூகத்தில் முன்னோர் வழிபாடு பெற்ற முக்கியத்துவத்தினையே எடுத்துக் காட்டுகின்றதெனலாம். இத்தகையதோர் நிலையினை திருக்குறள் காலத்திற்கு முன்னர் பெருங்கற்காலப் பண்பாட்டிலும் அடையாளப்படுத்த முடிகிறதெனலாம். இப்பண்பாட்டு மக்கள் இருப்பிடங்களை அழியக்கூடிய பொருட்களாலும், இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களை அழியாத கற்களையும், தாழிகளையும் கொண்டமைத்தனர். இம்மரபும் திருக்குறளில் இறந்தோருக்குரிய கடமைகளை முதன்மைப்படுத்திக் கூறியது போன்றதாகும்.

இதுவரை கிடைக்கப்பெற்ற சான்றாதாரங்களின் அடிப்படையில் பெருங்கற்காலப் பண்பாடானது தென்னிந்தியாவில் கி.மு 1200 தொடக்கம் கி.மு 300 வரையிலும், இலங்கையில் கி.மு 1000 தொடக்கம் கி.மு 300 வரையிலும் நிலவியிருந்தது. தொல்லியலாளர்கள் பலரின் கருத்துப்படி இலங்கை பெருங்கற்காலப் பண்பாட்டின் தொன்மையானது தென்னிந்தியப் பெருங்கற்காலப் பண்பாட்டுடனேயே தொடர்புபடுத்தப்படுகின்றது.

திருக்குறள் காலத்திற்கு முன்னதாக, தென்னாசியாவில் இறந்தவர்களை வழிபடும் மரபின் பொதுவான தொன்மையினை பெருங்கற்காலத்துடன் காணமுடிகின்றது. தமிழகத்தில் புலிமான்கோம்பை என்ற இடத்தில் கி.மு 3 ஆம் நூற்றாண்டிற்குரிய தமிழ்பிராமி எழுத்துப் பொறித்த பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட பலகைக்கற்களும் (பூங்குன்றன், காட்பாடி, 2007) கொடுமணல் என்ற இடத்தில் கற்பதுக்கை என அழைக்கப்படும் பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் கண்டுபிடிக்கப்பட்ட நெடிய கற்களும் இவற்றிற்கு சிறந்த உதாரணங்களாகும். எனினும் தென்னிந்தியாவின் புதிய கற்கால ஆய்வுகள் மூலம் வெளிக்கொணரப்பட்ட எச்சங்கள் குறிப்பாக தாழி அடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் செய்யும் மரபு, இவ்வீமக் குழிகளில் ஞாபகச் சின்னமாக நடப்பட்ட கற்கள் இவற்றுடன் காணப்பட்ட ஏனைய எச்சங்கள் என்பன புதிய கற்காலப் பண்பாட்டின் தொடர்ச்சியாகவே பெருங்கற்காலத்தை எடுத்துக் காட்டுகின்றது. புதிய கற்காலத்தில் தமது இருப்பிடத்திலேயே இறந்தோரை அடக்கம் செய்த மனிதன்

பெருங்கற்காலத்தில் தம் வசிப்பிடங்களுக்கு அப்பால் பெரிய கற்களைப் பயன்படுத்தி இறந்தோரை அடக்கம் செய்தான். இறந்தோரை அடக்கம் செய்யும் பொருட்டு பெருங்கற்காலத்தில் தாழி அடக்கம், நீளக்கிடத்தி அடக்கம் என்பவற்றுடன் பெரிய கற்களை கொண்டு அமைக்கப்பட்ட கற்பதுக்கை, கல்வட்டங்கள் போன்றனவும் அமைக்கப்பட்டன (சிற்றம்பலம்.சி.க, 2002). இவ்வாறான இறந்தவர்களுக்கான ஈமச்சின்னங்களை அமைப்பதில் பெருங்கற்காலப் பண்பாட்டு மக்கள் அதிக தொழில்நுட்பத்தை பயன்படுத்தியிருந்தனர். இதனை கற்களையும், தாழிகளையும் பயன்படுத்தி அமைக்கப்பட்ட ஈமச்சின்ன அமைப்பிலிருந்து கண்டுகொள்ளமுடிகின்றது. பெரிய பெரிய கற்களைக் கொண்டு ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்டதன் காரணமாகவே இப்பண்பாடு பெருங்கற்காலம் என அழைக்கப்படுகின்றது. தமிழகத்திலும் ஈழத்திலும் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் பெருங்கற்களால் அமைக்கப்பட்ட ஈமச்சின்னங்களும், முதுமக்கள் தாழிகளும், ஈமப் பேழைகளும் பரவலாக கிடைத்திருப்பதனைக் கொண்டு திருக்குறள் கூறும் இறந்தோர் வழிபாட்டு அம்சங்களை ஈமச்சின்ன அமைப்பு முறையிலும் அவதானிக்க முடிகின்றது.

பெருங்கற்காலப் பண்பாட்டின் முக்கிய அம்சங்களான ஈமச்சின்னங்கள், குளங்கள், வயல்கள், குடியிருப்புக்கள் என்பவற்றின் தொன்மையான வளர்ச்சி நிலையினை திருக்குறளில் பல்வேறு இடங்களில் காணமுடிகின்றது. குறிப்பாக நீர்ப்பாசன பொருளாதாரம், உழவுத்தொழில் (உழவு அதிகாரம், குறள் 542, 545, 557), நெற்செய்கையினைக் குறிக்கும் முகமாக அமைந்த வைக்கோல் பற்றிய குறிப்பு (குறள் 435), குளங்களின் அமைவு (குறள் 396, 523), மட்பாண்டங்களின் உற்பத்தி (குறள் 407, 660) போன்ற பண்பாட்டம்சங்களை உதாரணங்களாக குறிப்பிடமுடியும். தமிழகத்தின் பல்வேறு இடங்களில் இடம்பெற்ற தொல்லியல் ஆய்வுகள் வரலாற்றுதய காலமாகிய பெருங்கற்காலத்துடன் தமிழகப் பண்பாட்டின் ஆக்ககாலத்திற்குரிய பண்பாட்டம்சங்கள் தோற்றம் பெற்றதனை எடுத்துக்காட்டுகின்றன. இவற்றின் வளர்ச்சி நிலையான பண்பாட்டம்சங்களை திருக்குறளிலும் அவதானிக்க முடிகின்றதெனலாம். அவ்வகையில் திருக்குறள் கூறும் இறந்தோர் வழிபாட்டின் தொடக்க நிலையினை பெருங்கற்காலத்தில் அடையாளப்படுத்த முடிகின்றதெனலாம்.

அதாவது அப்பண்பாட்டில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட ஈமச்சடங்குகளாக பதுக்கைகள், கல்வட்டங்கள், நெடுங்கற்கள், தாழிகள் அமைந்து கொண்டன.

கல்வட்டம் எனும் பெருங்கற்கால ஈமச்சின்ன அமைப்பு முறையிலும் இறந்தவர்களுடைய ஈமக்கிரியை மரபுகளை அடையாளம் காணமுடிகின்றது. இம்மரபு நான்கு கற்களைப் பலகை போல் செதுக்கி அவற்றைப் பெட்டிவடிவில் பொருத்தி அதற்குமேல் கற்பலகை கொண்டு மூடுவதைக் குறிப்பதாகும். அவ்வாறு அமைக்கப்பட்ட கற்பொட்டிக்குள் இறந்தவரின் உடலை அல்லது எலும்புகளை அல்லது எரித்த சாம்பலை தாழியில் இட்டு சுற்றிவர நிவேதனப் பொருட்களை சிறிய சட்டிகளில் வைத்து அடக்கம் செய்யப்படும். சில இடங்களில் ஈமச்சின்னத்திற்குமேல் பெரிய தட்டையான கற்பலகை அல்லது தொப்பி வடிவில் செய்யப்பட்ட கல் உருவங்கள் வைக்கப்பட்டு அவற்றைத் தாங்கி நிற்பதற்கு கற்கள் நாட்டப்பட்டிருக்கும். இவ்வகை ஈமச்சின்னங்கள் இலங்கையில் மாமடு, இபன்பட்டுவ, கதிரவெளி, சாட்டி போன்ற இடங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

பண்டைத் தமிழரின் மிகத் தொன்மையான ஈமக்கிரியை முறைகளினை முதுமக்கட் தாழியடக்க முறைகளில் காணமுடிகின்றது. பெருங்கற்கால பண்பாட்டில் இவ்அடக்கமுறையானது செல்வாக்குப் பெற்றதாகும். இப்பண்பாட்டில் ஒருவர் இறந்ததும் அவரது உடலை குடியிருப்புக்கு வெளியே புறம்போக்கான ஓர் இடத்தில் உடலின் முக்கிய பாகங்களை நிவேதனப் பொருட்களுடன் தாழியில் இட்டு நிலத்தில் புதைக்கும் மரபு பரவலாக காணப்பட்டதனை தொல்லியல் சான்றுகள் எடுத்துக் காட்டுகின்றன. தென்னிந்தியாவில் பரவலாக தாழியடக்க மையங்கள் அடையாளப்படுத்தப்பட்ட போதும் இந்தியாவின் மிகப்பெரிய தாழிக்காடாக தமிழகத்தின் ஆதிச்சநல்லூர் சிறப்பு பெறுகின்றது. ஆதிச்சநல்லூரினை ஒத்த தாழிக்காட்டினை இலங்கையில் புத்தள மாவட்டத்தில் பொம்பரிப்பில் காணமுடிகின்றது. இங்கு மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளில் 800க்கு மேற்பட்ட தாழிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. அத்தாழிகளில் இறந்தவர்களின் உடல் முழுமையாகவும், பகுதியாகவும் தாழியில் போடப்பட்டு அடக்கம் செய்யப்பட்டன. சில தாழிகளில் ஒன்றிற்கு

மேற்பட்ட மனித உடல்கள் ஒன்றாக அடக்கம் செய்யப்பட்டன. அவை ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்களின் எலும்புகள் ஒன்றாகச் சேர்த்து வைக்கப்பட்டு பின்னர் தாழியில் போட்டு அடக்கம் செய்யப்பட்டதாக கூறப்படுகின்றது. சில இடங்களில் அடக்கம் செய்யப்பட்ட தாழிகளில் மட்பாண்டங்களில் காணப்படும் இருதலை, முத்தலைச் சூலங்களும், அவற்றோடு கண்டுபிடிக்கப்பட்ட சுடுமண்ணால் செய்யப்பட்ட இலிங்க வடிவங்கள், ஆண்பெண் உருவங்கள் இலங்கையில் தோன்றிய சிவன், சக்தி வழிபாட்டின் தொடக்கச் சின்னங்களாகக் கருதப்படுகின்றன. இவ்வகையான ஈமச்சின்னங்களை வடஇலங்கையில் குஞ்சுப்பரந்தன், பூநகரி, சாட்டி, ஆனைக்கோட்டை, வல்லிபுரம் போன்ற இடங்களில் அடையாளப்படுத்த முடிந்துள்ளது (புஸ்பரட்ணம்.ப. 2018). புரதான நாகரிகங்கள் தொட்டு மக்களிடையே மறுபிறப்பு பற்றிய நம்பிக்கை வேரூன்றியிருந்ததனை அவதானிக்கமுடிகின்றது. தென்னாசியாவில் இற்றைக்கு மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட பழமை கொண்ட பெருங்கற்காலத்திலும் இவ்வாறானதொரு நம்பிக்கை இருந்துள்ளதெனலாம்.

அப்பண்பாட்டு மக்கள் தம் இருப்பிடங்களினை அமைப்பதை காட்டிலும் ஈமச்சின்னங்களின் அமைப்பு முறையிலேயே அதிக கவனம் செலுத்தியிருந்தனர். ஈமச்சின்னங்களினை அழியாத பொருள்களைக் கொண்டு அதாவது பெரிய கற்களினைக் கொண்டு பல வடிவங்களில் அமைத்திருந்தனர். கற்கள் கிடைக்கப்பெறாத பகுதிகளில் தாழிகளினை பல்வேறு வடிவங்களில் அமைந்திருந்தனர். அத்துடன் இறந்தவருடன் பல்வேறான பொருட்களையும், அவர்கள் வாழ்நாளில் பயன்படுத்திய பாவனைப் பொருட்களையும் சேர்த்து அடக்கம் செய்திருந்ததனை ஈமச்சின்ன ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்பொருட்சின்னங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

சங்ககால பதுக்கைகள் பலவற்றில் கிழக்குப் புறத்தில் ஒரு மனிதன் நுழையும் அளவிற்கு இடைவெளி காணப்பட்டிருந்ததாகவும், அவ்விடைவெளி இறந்தவரின் ஆன்மா வேண்டும் போது வெளியே சென்று வரவேண்டும் என்ற நம்பிக்கையின் காரணமாக அமைந்ததெதென சா.குருமூர்த்தி குறிப்பிடுகின்றார். இவை அப்பண்பாட்டு மக்களிடையே மறுபிறப்பு பற்றிய நம்பிக்கை இழையோடியிருந்த தன்மையையே

எடுத்துக்காட்டுகின்றதெனலாம். திருவள்ளுவரும் மறுபிறப்பு பற்றிய நம்பிக்கையினை ஏற்றுக்கொண்டு திருக்குறளின் பல்வேறு இடங்களிலும் அந்நம்பிக்கையினை வெளிப்படுத்தியுள்ளதனைக் காணமுடிகின்றது. உதாரணமாக,

**"ஒருமைக் கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு**
**எழுமையும் ஏமாப்பு உடைத்து" (குறள் 399)**

ஒரு பிறப்பிலே தான் கற்ற கல்வியானது ஒருவனுக்கு ஏழு பிறப்பிலும் உதவி செய்யும் தன்மையுடையது.

**"உறங்கு வதுபோலும் சாக்காடு உறங்கி**
**விழிப்பது போலும் பிறப்பு" (குறள் 339)**

ஒவ்வொரு நாளும் மனிதன் இரவில் தூங்கிப் பகலில் விழிப்பதுபோல உயிரானது ஒவ்வொரு பிறவியையும் எடுத்துக்கொண்டேயிருக்கும்.

**"வேண்டுங்கால் வேண்டும் பிறாவாமை மற்றது**
**வேண்டாமை வேண்டவரும்" (குறள் 362)**

ஒருவன் ஒன்றை விரும்புவதனால் மீண்டும் இவ்வுலகில் பிறவாத நிலையையே விரும்பவேண்டும் அந்தப் பிறவா நிலைமை ஆசையற்ற நிலையை விரும்புவதனால் உண்டாகும். இக்குறள்கள் திருக்குறள்கால சமுதாயத்திலும் மறுபிறப்பு பற்றிய நம்பிக்கை வலுப்பெற்றிருந்ததனை எடுத்துக்காட்டுகின்றது.

தன்குழுவில் அல்லது இனக்குழுவில் வாழ்ந்த ஒருவர் இறந்த பின்னும் தன்னுடனேயே வாழ்கின்றான் என்ற நம்பிக்கையில் பண்டைய மனிதன் இறந்தவர் வழிபாட்டினை மேற்கொண்டிருந்தான். ஈமச்சின்னங்களுக்குரிய முழுமையான தொல்லியல் ஆதாரங்களை வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் அதிலும் குறிப்பாக வரலாற்றுதயகாலமாகிய பெருங்கற்கால ஈமச்சின்னங்களில் காணமுடிகின்றது. இதனையே கா.ராஜன் தொல்லியல் நோக்கில் சங்ககாலம் என்ற தனது நூலில் "இறந்தவர்களைப் புதைத்து அவர்களை வழிபடுகின்ற பழக்கம் பின்னாளில் பெருங்கற்படைச் சின்னங்களாக உருவாயின" என்று குறிப்பிடுகின்றார். பொதுவாக தமிழக, இலங்கைத் தமிழ் மக்களிடையே இன்றும் நிலவுகின்ற கிரியை முறைகள், நம்பிக்கைகள், மரபுகள் மற்றும் சமூகப் பண்பாட்டு பழக்கவழக்கங்கள் என்பவற்றின்

வரலாற்றைப் பின்னோக்கிப் பார்த்தால் அவற்றின் தொடக்கமாக பெருங்கற்காலமே விளங்கியிருந்ததெனலாம். இறந்தோர் வழிபாடு பற்றிய மரபுகளும் இத்தகையதே. பெருங்கற்காலப் பண்பாட்டு ஈமச்சின்னங்களில் இறந்தவர்களின் உடலோடு அவர்கள் வாழ்ந்த காலத்தில் பயன்படுத்திய அன்றாடப் பாவனைப் பொருட்கள், பலதரப்பட்ட உணவு வகைகள், தானியங்கள், கலைப்பொருட்கள், மங்கலப்பொருட்கள், சமயச் சின்னங்கள் முதலானவற்றை இறந்தவர்களுக்கான படையல் பொருட்களாக சிறிய மட்பாண்டங்களில் வைத்து இறந்தவர்களின் உடலைச் சுற்றி அடக்கம் செய்தனர். இம்மரபு இலங்கைத் தமிழரிடையே இன்றுவரை சில மாற்றங்களுடன் தொடர்ந்து வருவதனைக் காணமுடிகின்றது. இறந்தவர்களை வழிபடும் மரபு மிகத் தொன்மை வாய்ந்த வரலாற்றினையுடையதாகும்.

இம்மரபு இற்றைவரையும் இந்திய, இலங்கைத் தமிழ்மக்களிடையே தொடர்ந்து வருவதனையும் குறிப்பாக ஈமக்கிரியைகள், அந்தியேட்டி, திவசம், ஆடிஅமாவாசை விரதம், சித்திரா பௌர்ணமி விரதம், குலதெய்வ, கிராமியத் தெய்வ வழிபாடுகள், விழா எடுத்தல், படையல் படைத்தல் என்பவற்றைக் குறிப்பிடலாம். இன்று இலங்கைத் தமிழரிடையே பின்பற்றப்படும் மரணக்கிரியைகள், அபரக் கிரியைகள் என்பவற்றின் சடங்குகள், வாய்க்கரிசி போடும் மரபு என்பவற்றை ஆராய்ந்தால் அவற்றின் தொடக்கத்தினை இறந்தவர்களுக்காக ஈமச்சின்னங்கள் அமைக்கப்பட்ட பெருங்கற்காலத்திலிருந்து காணமுடிகிறது.

நெடுந்தீவு, இரணதீவு போன்ற இடங்களில் இறந்தவர்களை மரணமடைந்து விட்டார் எனக் கூறுவதற்கு பதிலாக பானையில் தூங்குகிறார், உறியில் தூங்குகிறார் எனக் கூறும் மரபு காணப்படுகின்றது. இது தாழி அடக்கமுறை பற்றிய பண்டைய வரலாற்று நினைவு தமிழ் மக்களிடையே முற்றாக மறையவில்லை என புஸ்பரட்ணம் குறிப்பிடுகிறார்.

தமிழர்களின் மிக முக்கிய நூலாகிய திருக்குறள் கூறும் இறந்தவர்களுடைய வழிபாடு, இறந்தவர்களுக்கு செய்ய வேண்டிய கடமைகள் மற்றும் மறுபிறப்பு பற்றிய சிந்தனைகள் பெருங்கற்கால பண்பாட்டு பின்னணியிலேயே நோக்கத்தக்கதாகும்.

இச்சிந்தனைகள் அக்காலச் சமூகத்தில் இறந்தவர் வழிபாடு பற்றிய ஒருவித நம்பிக்கையினையே வெளிப்படுத்தியுள்ளதெனலாம். இவற்றினூடாக அக்கால சமூக, சமய நிலையினை அறியமுடிவதுடன், திருக்குறள் காலத்திற்கு முன்பாக பெருங்கற்காலத்தில் இறந்தோர் வழிபாடு பெற்றிருந்த செல்வாக்கினையும், திருக்குறளில் கூறப்பட்ட இறந்தோர் வழிபாட்டு நிலையிலான வளர்ச்சி நிலையினையும் இற்றை வரை இனங்காண முடிகின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. ஐராவதம் மகாதேவன், 2008, திருவள்ளுவர் திருமேனி தாங்கிய தங்ககாசு, ஐராவதி, தமிழ்நாடு. இந்தியா.
2. சிற்றம்பலம்.சி.க. 2002, ஈழத்திற்காணப்படும் சங்ககால முதுமக்கட் தாழிகள், சங்கஇலக்கிய ஆய்வுகள் கைலாசபதி நினைவுக் கருத்தரங்கக் கட்டுரை, தேசிய கலை இலக்கிய பேரவை.
3. புஸ்பரட்ணம்.ப.2018, தமிழர் பண்பாட்டு மரபில் இறந்தவர்களுக்காக அமைக்கப்பட்ட நினைவுச் சின்னங்கள், வெளியிடப்படாத கட்டுரை.
4.



**திருமதி. சிவரூபி சபிதரன்**

தொல்லியல் விரிவுரையாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.